# Chapter
# இந்தியா – வேளாண்மை

---

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**Question** 1.
……………… மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது.
அ) வண்டல்
ஆ) கரிசல்
இ) செம்மண்
ஈ) உவர் மண்
**விடை:**
இ செம்மண்

**Question** 2.
எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது?
அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்
ஆ) இந்திய வானியல் துறை
இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம்
ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்
**விடை:**
அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்

**Question** 3.
ஆறுகளின் மூலம் உருவாகும் மண் …………
அ) செம்மண்
ஆ) கரிசல் மண்
இ) பாலைமண்
ஈ) வண்டல் மண்
**விடை:**
ஈ) வண்டல் மண்

**Question** 4.
இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை ……………………
அ) ஹிராகுட் அணை
ஆ) பக்ராநங்கல் அணை
இ) மேட்டூர் அணை
ஈ) நாகர்ஜூனா சாகர் அணை

**விடை:**
ஆ) பக்ராநங்கல் அணை

Question 5.
……………… என்பது ஒரு வாணிபப்பயிர்.
அ) பருத்தி
ஆ) கோதுமை
இ) அரிசி
ஈ) மக்காச் சோளம்
**விடை:**
அ) பருத்தி

Question 6.
கரிசல் மண் ……………… எனவும் அழைக்கப்படுகிறது.
அ) வறண்ட மண்
ஆ) உவர் மண்
இ) மலை மண்
ஈ) பருத்தி மண்
**விடை:**
ஈ) பருத்தி மண்

Question 7.
உலகிலேயே மிக நீளமான அணை …………
அ) மேட்டூர் அணை
ஆ) கோசி அணை
இ) ஹிராகுட் அணை
ஈ) பக்ராநங்கல் அணை
**விடை:**
இ ஹிராகுட் அணை

Question 8.
இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது …………………
அ) பருத்தி
ஆ) கோதுமை
இ) சணல்
ஈ) புகையிலை
**விடை:**
இ சணல்

## II. சரியான கூற்றைக் கண்டுபிடிக்கவும்.

Question 1.
கூற்று : பழங்கள் காய்வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.
காரணம் : உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டு சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி
**விடை:**
இ கூற்று சரி, காரணம் தவறு.

Question 2.
கூற்று : வண்டல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட, மக்கிய பொருட்களால் ஆன ஒன்று.
காரணம் : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டு சரி, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரியான விளக்கமல்ல
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.
**விடை:**
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டு சரி, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்

## III. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.

Question 1.
அ) கோதுமை
ஆ) நெல்
இ) தினை வகைகள்
ஈ) காபி
**விடை:**
ஈ) காபி

Question 2.
அ) காதர்
ஆ) பாங்கர்
இ) வண்டல் மண்
ஈ) கரிசல் மண்
**விடை:**
ஈ) கரிசல் மண்

Question 3.
அ) வெள்ளப் பெருக்க கால்வாய்
ஆ) வற்றாத கால்வாய்
இ) ஏரிப்பாசனம்
ஈ) கால்வாய்
**விடை:**
இ ஏரிப்பாசனம்

## IV. பொருத்துக .

| | | |
|---|---|---|
| 1. | இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | அ) மகாநதி |
| 2. | காபி | ஆ) தங்கப் புரட்சி |
| 3. | டெகிரி அணை | இ) கர்நாடகா |
| 4. | ஹிராகுட் | ஈ) உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார் |
| 5. | தோட்டக் கலை | உ) இந்தியாவின் உயரமான அணை |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | **ஈ) உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார்** |
| 2. | காபி | **இ) கர்நாடகா** |
| 3. | டெகிரி அணை | **உ) இந்தியாவின் உயரமான அணை** |
| 4. | ஹிராகுட் | **அ) மகாநதி** |
| 5. | தோட்டக் கலை | **ஆ) தங்கப் புரட்சி** |

## V. சுருக்கமாக விடையளி.

Question 1.
'மண்' – வரையறு

**விடை:**
மண் என்பது கனிமங்களின் கூட்டுப்பொருள்கள், மக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருள்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது புவியின் மேற்பரப்பில் காணப்படும் ஒரு அடுக்காகும்.

Question 2.
இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
**விடை:**

1. வண்டல் மண்
2. கரிசல் மண்
3. செம்மண்
4. சரளை மண்
5. காடு மற்றும் மலை மண்
6. வறண்ட பாலை மண்
7. உப்பு மற்றும் காரமண்
8. களிமண் மற்றும் சதுப்புநில மண்

Question 3.
கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.
**விடை:**
நிறம் :
டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால் கருப்பு நிறமாக உள்ளது.

மண்ணின் தன்மைகள் :
ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.

Question 4.
‘வேளாண்மை ‘ – வரையறு.
**விடை:**
வேளாண்மை என்பது குறிப்பிடப்பட்ட பயிர்களை உற்பத்தி செய்தும் மற்றும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும், நார் மற்றும் தேவையான இதர பொருள்களையும் வழங்குவதாகும்.

Question 5.
இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.
**விடை:**

- தன்னிறைவு வேளாண்மை
- இடப்பெயர்வு வேளாண்மை
- தீவிர வேளாண்மை
- வறண்ட நில வேளாண்மை
- கலப்பு வேளாண்மை
- படிக்கட்டு முறை வேளாண்மை

**Question** 6.
இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
**விடை:**

- காரிஃப் பருவம் – ஜூன்- செப்டம்பர்
- ராபி பருவம் – அக்டோபர் – மார்ச்
- சையத் பருவம் – ஏப்ரல் – ஜூன்

**Question** 7.
இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
**விடை:**
தோட்டப்பயிர்கள் – தேயிலை, காபி, இரப்பர்

**Question** 8.
கால்நடைகள் என்றால் என்ன?
**விடை:**

- கால்நடைகள் இந்தியாவின் விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும். கால்நடைகளின் பல்வேறு வகைப் பயன்பாடுகள் காரணமாக இவை சமூக மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.
- இவை சமூக, கலாச்சாரப் பாதுகாப்பிற்கும் தன் பங்களிப்பை தருகின்றது.
- ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை அளிப்பதன் மூலம் இவை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துகிறது.

**Question** 9.
இந்தியாவில் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.
**விடை:**
கடல் மீன்பிடிப்பு:

- கண்டத்திட்டு பகுதிகளில் மீன்பிடித்தல் நடைபெறுகிறது.
- கேரளா கடல்மீன் உற்பத்தியில் முதன்மையானதாகவே உள்ளது.

உள்நாட்டு மீன்பிடிப்பு:

- நீர்த்தேக்கங்களான ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் போன்ற நீர் நிலைகளில் நடைபெறும் நன்னீர் மீன்பிடிப்பு இவற்றில் அடங்கும்.
- ஆந்திரப்பிரதேசம் உள்நாட்டு மீன் பிடித்தலில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

## VI. காரணம் கூறுக.

Question 1.
வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.
**விடை:**
மக்கள் தொகையில் விவசாயம் 50% பங்கினையும், நாட்டு வருமானத்தில் 25% பங்கினையும் கொண்டுள்ளதால் வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு ஆகும்.

Question 2.
மழைநீர் சேமிப்பு அவசியம்.
**விடை:**
இந்தியா அயனமண்டல பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளதால் மழை ஒழுங்கற்று, சீராக கிடைப்பதில்லை. எனவே கிடைக்கும் நீரை சேமிப்பது அவசியம்.

## VII. வேறுபடுத்துக.

Question 1.
ராபி பருவம் மற்றும் காரிப் பருவம்.
**விடை:**

| வ.எண் | ராபி பருவம் | காரிப்பருவம் |
|---|---|---|
| 1. | விதைக்கும் காலம் அக்டோபர். அறுவடைக்காலம் மார்ச். | விதைக்கும் காலம் ஜுன். அறுவடைக் காலம் செப்டம்பர். |
| 3. | முக்கிய பயிர்: கோதுமை, கடுகு, நிலக்கடலை. | முக்கிய பயிர்: நெல், பருத்தி, ராகி. |

Question 2.
வெள்ளப் பெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்.

**விடை:**

| வ.எண் | வெள்ளப் பெருக்கு கால்வாய் | வற்றாத கால்வாய் |
|---|---|---|
| 1. | ஆற்றிலிருந்து நேரடியாக எவ்வித தடுப்பணைகளும் இன்றி தண்ணீர் எடுக்கப்படுகிறது. | நீரின் ஓட்டத்தைச் சீராக்க அமைக்கப்படுகிறது. |
| 2. | வெள்ள நீரைத் திருப்ப பயனுள்ளதாய் உள்ளது. | நீர்ப்பாசனத்திற்கு கால்வாய்கள் பயனுள்ளதாய் இருக்கும். |

Question 3.
கடல் மீன்பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன் பிடிப்பு.
**விடை:**

| வ.எண் | கடல் மீன்பிடிப்பு | உள்நாட்டு மீன் பிடிப்பு |
|---|---|---|
| 1. | கண்டத்திட்டு, கடலோர பகுதி ஆழ்கடல் மின்வளத்தை உள்ளடக்கியது. | ஆறுகளில், ஏரிகள், கால்வாய்கள், நிர்த்தேக்கங்கள், குளம், தொட்டி போன்றவை புதிய நீர்நிலை ஆதாரங்கள். |
| 2. | இதில் கேரளா முன்னிலையில் உள்ளது. | இதில் ஆந்திரா முன்னிலையில் உள்ளது. |

Question 4.
வண்டல் மண் மற்றும் கரிசல் மண்
**விடை:**

| வ.எண் | வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|---|
| 1. | ஆறுகளால் பதிய வைக்கப்படும் மணலில் உருவாகிறது. | பசால்ட் பாறைகளிலிருந்து உருவாகிறது. |
| 2. | இதில் பொட்டாசியம், பாஸ்பாரிக் அமிலம், சுண்ணாம்பு, கார்பன் கலவைகள் நிறைந்துள்ளது. | இதில் பொட்டாஸ் சுண்ணாம்பு, அலுமினியம், கால்சியம் மற்றும் மக்னீசியம் அமைந்துள்ளது. |
| 3. | நெல், கோதுமை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துகள் பயிரிடப்படுகின்றன. | பருத்தி, புகையிலை, கரும்பு மற்றும் தினைவகைகள் பயிரிடப்படுகிறது. |

## VIII. பத்தியளவில் விடையளி.

Question 1.
இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.
**விடை:**

| மண் வகைகள் | மண்ணின் பண்புகள் | பரவல் |
|---|---|---|
| வண்டல் மண் | **நிறம்:** அடர் நிறம் உடையது.<br>**உருவாக்கம்:** சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைத்ததினால் உருவாகின்றன.<br>**வேதியியல் பண்புகள்:** பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாகவும் நைட்ரஜன் குறைவாகவும் உள்ளது.<br>**மண்ணின் தன்மைகள்:** வண்டல், மண்மண்டி களிமண் போன்ற கலவைகளுடன் மண்ணடுக்கு காணப்படுகிறது. | கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள், உத்திரப் பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மேற்கு வங்கம் மற்றும் பீகார் மாநிலங்களில் உள்ள சமவெளிப் பகுதிகள். |
| கரிசல் மண் | **உருவாக்கம்:** தக்காணப்பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது.<br>**நிறம்:** டைட்டானியம் மற்றும் இரும்பு தாதுக்களால கருப்பு நிறமாக உள்ளது.<br>**வேதியியல் பண்புகள்:** கால்சியம், மக்னீசியம், கார்போனேட்டுகள், அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன.<br>**தன்மைகள்:** ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது. | மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி கத்தியவார் தீபகற்பம், தெலுங்கானா, ஆந்திர பிரதேசத்தில் உள்ள ராயல்சீமா மற்றும் கர்நாடக மாநிலத்தின் வடபகுதி. |
| செம்மண் | **உருவாக்கம்:** பழமையான படிக பாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள், சிதைவடைவதால் உருவாகின்றன.<br>**வேதியியல் பண்புகள்:** இரும்பு மற்றும் மக்னீசியம் அதிகமாக காணப்படுகிறது. நைட்ரஜன், இலைமக்குகள், பாஸ்போரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்புசத்துகள் குறைவாக காணப்படுகின்றன.<br>**மண்ணின் தன்மைகள்:** மென்துகள்கள் இடையளவு குறிப்பிடப்பட்டுள்ள உப்புக்கரைசல், வெண்களிப் பாறைத்தாதுக்கள், சிறு வெடிப்புகளுடன் கூடிய செம்மண் படிவு. | தக்காண பீடபூமியின் கிழக்குப்பகுதி, தென் மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் சோட்டாநாகபுரி பீடபூமி, ஜார்கண்ட். |
| சரளைமண் | **உருவாக்கம்:** வெப்பம் மற்றும் குளிர் அடுத்தடுத்து நிகழும் போது மண்சுவரல் காரணமாக உருவாகிறது.<br>**வேதியியல் பண்புகள்:** இரும்பு மற்றும் அலுமினியத்தின் நீரேற்ற ஆக்சைடுகளால் உருவானது.<br>**தன்மை:** உயரமான மலைப்பகுதிகளில் அதிகமான அமிலத் தன்மையுடனும் தாழ்வான பகுதிகளில் குறைந்த அளவும் உள்ளது. பொதுவாக இது ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்வதில்லை. ஆனால் களிமண் கலந்த வண்டல் படிவுகளைக் கொண்ட சமவெளிப் பகுதிகளில் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்கிறது. | அசாம் குன்றுகள், கேரளா மற்றும் கர்நாடகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதிகள், ஒடிசா மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள். |

| | | |
|---|---|---|
| **காடு மற்றும் மலை மண்** | **உருவாக்கம்:** பனிமழை வெப்பநிலை வேறுபாடுகளால் பௌதீக சிதைவின் காரணமாக உருவாகின்றது.<br>**வேதியியல் பண்புகள்:** பொட்டாஷ், பாஸ்பரஸ் மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் குறைவாகக் காணப்படுகிறது.<br>**தன்மை:** மென்மையான மணல் மற்றும் பாறைதுகள்கள் கலந்து காணப்படுகிறது. | இமாச்சலப்பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம் போன்றமாநிலங்களில் உள்ள ஊசியிலைக் காடுகளின் பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள். |

Question 2.
பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
**விடை:**
பல்நோக்குத் திட்டம்:

- இது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டமாகும்.
- ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்குத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது.
- நீர்ப்பாசனம், நீர்மின் உற்பத்தி, குடிநீர் மற்றும் தொழிற்சாலைக்கு நீர் வழங்குதல், வெள்ளத்தடுப்பு, மீன்வள மேம்பாடு, நீர் வழிப் போக்குவரத்து போன்றவை இதன் பல்வேறு நோக்கங்களாகும்.
- நீர் மின் சக்தி மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை பெரும்பாலான பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

பல்நோக்குத் திட்டத்தின் பெயர்:

| பல்நோக்குத் திட்டத்தின் பெயர் | ஆறுகள் | ஆறுகள் |
|---|---|---|
| தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் | தாமோதர் | மேற்குவங்காளம், ஜார்கண்ட் |
| பக்ரா நங்கல் திட்டம் | சட்லெஜ் | பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் |
| மேட்டூர் அணை | காவிரி | தமிழ்நாடு |

Question 3.
தீவிர வேளாண்மை மற்றும் தோட்ட வேளாண்மையின் பண்புகளை வெளிக் கொணர்க .
**விடை:**
தீவிர வேளாண்மையின் பண்புகள் :

- தீவிர வேளாண்மை எனப்படுவது இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அறிமுகப்படுத்துவதாகும்.
- சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள் மற்றும் இரசாயான உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறுவது இதன் நோக்கமாகும்.

தோட்ட வேளாண்மையின் பண்புகள் :

- தோட்டப்பயிர்கள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பயிரிடப்படுகிறது.
- இவை மலைச் சரிவுகளில் பெரிய எஸ்டேட் பண்ணைகளாக உள்ளது.
- கடற்கரைப் பகுதிகளுக்கு அருகாமையில் பயிரிடுதல் இவற்றின் ஏற்றுமதிக்கு உகந்ததாக அமையும்.
- தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருட்கள் ஆகியவை இந்தியாவின் முக்கியத் தோட்டப்பயிர்களாகும்.

**Question** 4.
நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.
**விடை:**
உணவுப்பயிர்கள்:
அதிக மக்கள் தொகை காரணமாக இந்திய வேளாண்மை பெரும்பாலும் உணவுப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

நெல் :

- நெல் இந்தியாவின் பூர்வீகப் பயிராகும். உலகளவில் நெல் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது.
- இது அயனமண்டலப் பயிராகும். 24°C சராசரி வெப்பநிலையும், 150 செ.மீ ஆண்டு மழையளவும் உள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது.
- வளமான களிமண் அல்லது வண்டல் மண் நெல் சாகுபடிக்கு ஏற்றது.
- நெல் பயிரிட அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.
- இந்தியாவில் நெல் மூன்று முறைகளில் பயிரிடப்படுகின்றது.
  விதைத் தூரல் முறை
- ஏர் உழுதல் (அ) துளையிடும் முறை
- நாற்று நடுதல் முறை

கோதுமை :

- நெற்பயிருக்கு அடுத்தாற்போல் இரண்டாவது முக்கிய உணவுப் பயிராக விளங்குவது கோதுமை ஆகும்.
- சுமார் 85 சதவிகிதத்திற்கும் மேலான கோதுமை உற்பத்தி உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களிலிருந்து கிடைக்கிறது.
- இதைத் தவிர மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களின் கரிசல்மண் பிரதேசமும் கோதுமை உற்பத்தியில் ஒரு முக்கிய பங்களிப்பினை அளிக்கிறது.